# DEPOSITION OF WITNESS
## CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
## IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No. 91 /2013

Deposition of Witness : DW1

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜோதீஸ்வரன் | Father's/Husband's Name : ராஜ் | |
| Village | : நந்தனார்புரம் | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 54 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.06.2026

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) வழக்கில் நான் 9ம் பிரதிவாதி என்றால் சரிதான். இந்த வழக்கில் எனது தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் ஆமாம் தாக்கல் செய்துள்ளேன். எந்த தேதியில் நான் கையொப்பம் செய்து எதிர்வழக்குரை தாக்கல் செய்தேன் என்று கேட்டால் எனக்கு ஞாபகம் இல்லை. இந்த வழக்கில் 3ம் பிரதிவாதி கணேசன் தான் எதிர்வழக்குரை தாக்கல் செய்திருக்கிறார் என்றாலும் நான் எந்த எதிர்வழக்குரையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், நான் தாக்கல் செய்யவில்லை. வழக்கு விபரங்களை எங்கள் வழக்கறிஞருக்கு எனது சகோதரர் தான் சொன்னார் என்றாலும் நான் எந்த விபரமும் வழக்கறிஞருக்கு சொல்லவில்லை என்றால் சரியல்ல, இருவரும் சொன்னோம். எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை வழக்கறிஞருக்கு எனது அண்ணன் கணேசன் தான் சொன்னார். அதன் பேரில் வழக்கறிஞர் தயார் செய்துநீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறார். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை எனது வழக்கறிஞருக்கு நேரடியாக நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியிருக்கிறேன்.

2) தாவா சொத்தின் சர்வே எண்.879/5. அதன்விஸ்தீரணம் 2 ஏக்கர் 92 செண்ட் ஆகும். தாவா சொத்து ஆதியில் அரசிற்கு பாத்தியப்பட்டிருந்து பின்பு அவரவர்கள் காடு வெட்டி அனுபவித்து வந்ததின் பேரில் அனுபவத்தில் உள்ளவர்களுக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு சுப்பையா பெயருக்கு பட்டா வழங்கப்பட்டது. மேற்படி அனுபவத்தின் பேரில் நந்தனார்புரத்தில் எங்கள் குடும்பத்தை சேர்ந்த யார் யார் பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்றால் ராஜ் (1ம் பிரதிவாதி) மற்றும் எனது தாயார் லட்சுமியம்மாளுக்கு பட்டா வழங்கப்பட்டது. நான்

சொல்வது போல் மேற்படி நபர்களை தவிர்த்து சுப்பையாவின் மகன்களான சிங்கராஜ், மகாலிங்கம், ராஜுவின் மனைவி சுந்தரம்மாள்ஆகியோருக்கும் அனுபவத்தின் பேரில் அரசாங்கத்தால் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு சுப்பையா பெயரில் வழங்கப்பட்ட பட்டாவை தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்திற்கு பட்டா எண்.917ல் சர்வே எண்.879/5 என்ற நிலத்திற்கு சுப்பையா பெயரில் எந்த காலத்திலும் அரசாங்கத்தால் பட்டா வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. சுப்பையா பெயரில் பட்டா இல்லாததால் தான் அந்த ஆவணத்தை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சுப்பையா பெயரில் பட்டா இல்லை.

3) தாவா சொத்தை எந்த காலத்திலும் சுப்பையா அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல, அவர் தான் அனுபவம் செய்தார். சுப்பையாவிற்கு 3 ஆண்கள் மற்றும் 3 பெண் பிள்ளைகள் உள்ளனர் என்றால் சரிதான். அவர்களின் பெயர்கள் சுந்தரம்மாள், மகாலிங்கம், சிங்கராஜ், கருப்பையா, லட்சுமி, ராமுத்தாய். மேற்படி நபர்களில் கருப்பையா பல வருடங்களுக்கு முன்பு காணாமல் போய் விட்டார். அவர் எங்கு இருக்கிறார் என்று யாருக்கும் தெரியாது. சுந்தரம்மாள் மற்றும் லட்சுமி இருவரையும் 1ம் வாதி ராஜ் திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். சிங்கராஜின் மகன்கள் தான் 1, 2 வாதிகள் என்றால் சரிதான். 3ம் வாதி சிங்கராஜின் மனைவி என்றால் சரிதான். தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். என்ன ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேன் என்று கேட்டால் வெண்ணிலை பத்திரம், பாக பிரிவினை பத்திரம் தாக்கல் செய்திருக்கிறேன். நான் சொல்வது போல் எந்த வெண்ணிலை ஆவணமும் எங்கள் தரப்பில் குறியீடு செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

4) தாவா சொத்து எதன் அடிப்படையில் எங்களுக்கு பாத்தியப்பட்டது என்ற விபரத்தை பி.வா.சா.ஆ.4 பாக பிரிவினை பத்திரத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆவணத்தில் என்ன இருக்கிறதோ அது தான் சரி. தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் வாதிகளின் பாகத்தையும் சேர்த்து மோசடியாக பி.வா.சா.ஆ.4 ஆவணம் பதிவு செய்திருக்கிறோம் என்றால் சரியல்ல. தாவா சொத்து எந்த காலத்திலும் எங்களுக்கு பாத்தியப்பட்டது இல்லை என்றாலும் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்தில்

எங்களுக்குளந்த உரிமையும் ஏற்படாது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 1ம் வாதியின் தகப்பனார் காடு வெட்டி அனுபவம் செய்து அவர் பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்மூலத்தில் சொல்லியுள்ளது போல் கடந்த 18.02.1976ம் தேதி 1ம் வாதியின் தகப்பனார் சிங்கராஜ் 1ம் பிரதிவாதிக்கு எந்த வெண்ணிலை பத்திரமும் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

5) அதேபோல் 24.04.1979ம் தேதி மகாலிங்கம் என்பவரிடம் 1ம் பிரதிவாதி வெண்ணிலை பத்திரம் எதுவும் எழுதி வாங்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனது தாயாரார்களான சுந்தரம்மாள் மற்றும் லட்சுமியம்மாளுக்கு உள்ள 2/4 பாகத்தையும் நாங்கள் அனுபவம் செய்து வருவதாக பொய்யாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல, நாங்கள் தான் அனுபவம் செய்து வருகிறோம். தாவா சொத்து சுப்பையாவிற்கு பாத்தியப்பட்டிருந்தால் அவரது வாரிசுகளுக்குள் 6 பங்காக பிரித்திருக்க வேண்டும் என்றாலும் 4 பங்காக பிரித்து கொண்டோம் என்று சொல்வது சரியல்ல. கருப்பையா காணாமல் போய்விட்டார். ராமுத்தாய்க்கு சீர்வரிசைகள் செய்துவிட்டோம். தாவா சொத்து சுப்பையாவிற்கு பாத்தியப்பட்டது இல்லை என்பதால் தான் கருப்பையா மற்றும் ராமுத்தாய் தாவா சொத்தில் பாகம் கேட்கவில்லை என்றால் சரியல்ல.

6) எனது தகப்பனருக்கு லட்சுமியம்மாள் மற்றும் சுந்தரம்மாள் என்ற இரு மனைவிகள் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் மேற்படி லட்சுமியம்மாள் மற்றும் சுந்தரம்மாளுக்கு தாவா சொத்தில் 4ல் 2 பாகம் இருப்பதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் 2வது நபராக கைரேகை வைத்துள்ள நபர் லட்சுமியம்மாள் என்ற சுந்தரம்மாள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள கைரேகை சுந்தரம்மாளுடையது தான். நான் சொல்வது போல் சுந்தரம்மாளின் கைரேகையாக இருந்தால் ஆவணத்தில் லட்சுமியம்மாள் என்ற சுந்தரம்மாள் என்று குறிப்பிடப்பட்டிருப்பது தவறு என்றால் சரிதான். சுந்தரம்மாள் என்ற லட்சுமியம்மாள் என்று யாரும் இல்லை. இருவரும் வேறு வேறு நபர்கள். அந்த ஆவணத்தில் லட்சுமியம்மாள் என்ற சுந்தரம்மாள் என்று தான் அனைத்து பக்கங்களிலும் கைரேகை வைத்துள்ளார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 போலியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

7) பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் லட்சுமியம்மாள் மற்றும் சுந்தரம்மாளுக்கு தாவா சொத்தில் 4ல் 2 பங்கு எப்படி பாத்தியப்பட்டது என்பதை குறிப்பிட்டு சொல்லியிருக்கிறோமா என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்துவிட்டு இல்லை என்று பதிலளித்தார். பி.வா.சா.ஆ.4 பாக பிரிவினை ஆவணம் சட்டப்படி செல்லாது என்பதால் அதன் அடிப்படையில் நாங்கள் ஏற்படுத்திக்கொண்ட ஒத்தி கிரையம்போன் றஆவணங்களும் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு அருகில் தான் எங்களுக்கு பாத்தியப்பட்ட மற்ற விவசாய நிலங்கள் இருக்கிறது என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்பந்தமாக கணேசன் மற்றும் அவரது மனைவியுடன் வாதிக்கு பிரச்சனை ஏற்பட்டதால் அது சம்பந்தமாக வருசநாடு காவல் நிலையத்தில் குற்ற எண்.103/2013 என்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி புகாரானது வாதி விவசாயம் செய்து கொண்டிருந்த நிலத்தில் 3ம் பிரதிவாதி மற்றும் அவரது மனைவி இடைஞ்சல் செய்ததால் தான் பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 8) வாதிகள் அனுபவத்திற்கு இடைஞ்சல் செய்ததால் தான் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றாலும் நான் இந்த வழக்கிற்காக இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் இன்று வரை வாதிகள் தான் விவசாயம் செய்கிறார்கள் என்றாலும் அதற்கு பிரதிவாதிகள் இடைஞ்சல் செய்துவருகிறோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதிகள் இல்லாத சமயத்தில் 3ம் பிரதிவாதி சடலத்தை புதைத்து வேண்டமென்றே பிரச்சனை செய்தோம் என்றால் சரியல்ல, உடலை புதைக்கும் போது கணேசன் ஊரில் தான் இருந்தார். நான் சொல்வது போல் அன்றைய தேதியில் வாதி ஊரில் இல்லை என்றாலும் தாவா சொத்தை அபகரிக்க வேண்டும்எ ன்ற எண்ணத்தில் வேண்டுமென்றே சடலத்தை அங்கு புதைத்து பிரச்சனை செய்தோம்என்றால் சரியல்ல.

9) 2ம் பிரதிவாதி சிவக்குமார் இறந்துவிட்டார்என்றால் சரிதான். அவர் 3ம் பிரதிவாதி கணேசன் இறப்பதற்கு முன்பே இறந்துவிட்டார். 2ம் பிரதிவாதிக்கு பொது மயானத்தில் வைத்து தான் அனைத்து காரியங்களும் செய்து முடிக்கப்பட்டு அவரது உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது என்றால் சரிதான். இறந்துபோன எங்களுடைய முன்னோர்கள் அனைவரும் 2ம் பிரதிவாதி அடக்கம் செய்யப்பட்டது போல் பொது மயானத்தில் தான் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். 3ம் பிரதிவாதி வழக்கு நிலுவையில் இருக்கும் போது தான இறந்துவிட்டார் என்றால் சரிதான். தாவா சொத்தை அபகரிக்க

வேண்டும் என்ற எண்ணத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும் போது வேண்டுமென்றே 3ம் பிரதிவாதியின் உடலை தாவா சொத்தில் அடக்கம் செய்தோம் என்றால் சரியல்ல.

10) தாவா சொத்து எங்கள் அனுபவத்தில் இருக்கிறது என்பதற்கான ஆவணத்தை உருவாக்க வேண்டி தான் எங்கள் குடும்ப வழக்கத்திற்கு மாறாக 3ம் பிரதிவாதியின் உடலை தாவா சொத்தில் அடக்கம் செய்தோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் என்னென்ன விவசாயம் செய்யப்படுகிறது என்றால் மா, வாழை, தென்னை மரங்கள் உள்ளன. மேற்படி மரங்கள் விளைச்சல் உள்ள மரங்கள் என்றால் சரிதான். மேற்படி விளைச்சலை காட்டும் வகையில் தாவா சொத்திற்கான அடங்கல் கணக்கு தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.11 கிஸ்தி இரசீது 16.04.2026ம் தேதி ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். 2026ம் ஆண்டிற்கு முன்பு பிரதிவாதிகள் பெயரில் உள்ள கிஸ்தி இரசீது தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. தாவா சொத்தில் பிரதிவாதிகள் அனுபவத்தில் இல்லாததால் தான் எனது பெயரிலோ அல்லது 3ம் பிரதிவாதி பெயரிலோ கிஸ்தி இரசீது தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

11) பி.வா.சா.ஆ.11 இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. நாங்கள் தாவா சொத்தின் அனுபவத்தில் இல்லாததால் தான் எங்கள் அனுபவத்தை காட்டக் கூடிய ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றாலும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது இல்லை என்று சொன்னாலும் சரியல்ல. தாவா சொத்தில் வாதிகள் இல்லாத போது தாவா சொத்தில் உள்ள விளைச்சலை பிரதிவாதிகள் எடுத்து கொள்கிறோம் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதிகளின் நிலத்திற்கு அருகில் இருப்பதால் அதன்விளைச்சலை எடுத்துக் கொண்டு அதை கேட்டால் வாதியை அடித்து காயப்படுத்துகிறோம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 ஆவணத்தை அடிப்படையாக வைத்து நாங்கள் உற்பத்தி செய்துள்ள எந்த ஆவணங்களும் சட்டப்படி செல்லக்கூடியதல்ல என்றால் சரியல்ல. மோசடியான ஆவணங்களை வைத்து கொண்டு இந்த வழக்கில் பொய்யான எதிர்வாதம் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பிரதிவாதிகளுக்கு எந்த உரிமையும் அனுபவமும் இல்லை என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.

மறு விசாரணை : இல்லை

Taken down by me/before me in open court on 11.06.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN

Digitally signed by E SUGANTHAN
Date: 2026.06.11 15:40:05 +0530

District Munsif,
Aundipatti.